**செ. கு. எண்: 112** **நாள்: 03.07.2020**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்

இரங்கல் செய்தி – 3.7.2020

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் அரசு தாலுக்கா மருத்துவமனையில் மருத்துவ அலுவலராகப் பணியாற்றி வந்த மருத்துவர் எஸ். சுகுமாரன் அவர்கள் கொரோனா வைரஸ் நோய் தொற்றிற்கு உள்ளாகி, தனியார் மருத்துவமனையில் **20.6.2020** முதல் **30.6.2020** வரை சிகிச்சை பெற்று வந்தார் எனவும், இவருக்கு ஏற்கனவே நீரிழிவு நோய் மற்றும் இரத்த கொதிப்பு நோய் இருந்ததாகவும், நுரையீரல் பாதிப்பு ஏற்பட்டதால், சென்னை ராஜிவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் **30.6.2020** அன்று இரவு **8.45** மணிக்கு சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெற்றார் எனவும், சிகிச்சை பலனின்றி இன்று **(3.7.2020)** காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

மரு. சுகுமாரன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்திற்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்து கொடுக்க மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறைக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

மரு. சுகுமாரன் அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

இந்த பேரிடர் நோய்த் தொற்று காலத்தில், கடமை தவறாமல் கண்ணியத்துடன் பணியாற்றிய **மரு. சுகுமாரன் அவர்களின் குடும்பத்திற்கு அரசு அறிவித்தபடி நிவாரணம் வழங்கவும், அன்னாரது குடும்பத்தில் ஒருவருக்கு தகுதியின் அடிப்படையில் அரசுப்பணி வழங்கவும் நான் உத்தரவிட்டுள்ளேன்.**

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**